**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண்.2503/ஆ5/2025, நாள்.25/08/2025**

.....

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு இயக்க மேலாண்மை பிரிவு (Mission Management Unit) – போதைப்பொருள் துஷ்பிரயோகம் குறித்த அடிப்படைக் கணக்கெடுப்பு நடத்துவது தொடர்பாக – அறிவுரை வழங்குதல் – சார்ந்து |
| பார்வை | சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.047393/எம்/இ1/2025, நாள். 21.08.2025 |

•••••

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, தமிழ்நாட்டில் உள்துறை, மதுவிலக்கு மற்றும் கலால் துறை போதைப்பொருள் துஷ்பிரயோகம் குறித்த அடிப்படை கணக்கெடுப்பை நடத்துவதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. அதன் அடிப்படையில் போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு இயக்க மேலாண்மைப் பிரிவு (MMU – Mission Management Unit) பள்ளி மாணவர்களிடையே போதைப்பொருள் துஷ்பிரயோகம் குறித்த அடிப்படைக் கணக்கெடுப்பை நடத்திட திட்டமிட்டுள்ளது.

எனவே, வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை நடுநிலை / உயர்நிலைப் / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்கள் / தலைமையாசிரியர்கள் / ஆசிரியர் ஒருவர் பார்வையின்படி கொடுக்கப்பட்டுள்ள Google Form Link மூலமாக https://forms.gle/znBeutPKoJY6u4jN7 கேட்கப்பட்டுள்ள வினாக்களை 08.09.2025–க்குள் தவறாமல் பதிவுகள் மேற்கொள்ளுமாறு அனைத்து வகை வகை நடுநிலை / உயர்நிலைப் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி முதல்வர்களுக்கு அறிவுறுத்துமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்க / தனியார் பள்ளிகள்) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு – https://forms.gle/znBeutPKoJY6u4jN7

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

25.08.25

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம். (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் / தனியார் பள்ளி முதல்வர்வள்,
   வேலூர் மாவட்டம்.
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)

நகல்–
தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.